# 9 உரையாடல் விதிமுறைகளை உருவாக்குதலும் பயிற்சி செய்தலும்

**இலக்கு**

*இணையராகவும் குழுவாகவும் சிறந்த உரையாடலை நடத்துதற்கான விதிமுறைகளை மாணவர்கள் கண்டுபிடித்துப் பயிற்சிசெய்வர். இதனால், அவர்கள் தம்முடைய தொடர்பாடல், மாற்றுச் சமூகத் தகைமைகளை விரிவடையச் செய்வதுடன் குழு உரையாடல்களிற் கூட தம்மைத் திறமையுடன் செயற்படுத்துதற்குக் கற்கின்றார்கள்.*

தரம் 2 - 9

15 - 30 மணித்துளிகள்



**கருவிகள்:**
முடியுமாயின் ஓர் அட்டை

**குறிப்புகள்:**

- பயன்தரு பேச்சுகளுக்கும், உரையாடல்களுக்கும் உரையாடல் விதிமுறைகளையும் சமத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் முதற் கட்டளை ஆகும். இது தனிப்பட்ட உரையாடலுக்கு மட்டுமன்றி சமூக மற்றும் மொழிக் கல்வியின் இலக்குப்பரப்புகளில் ஒன்றான ஊடகத்தகைமையை கொள்ளும் பள்ளிச்சூழலுக்கும் பொருந்தும். அத்தகைய பண்பாட்டினை உருவாக்குவது நேரத்தையும் பேண்தகு பணியையும் பயிற்சியையும் வேண்டிநிற்கும் நீண்டகால செயல்முறையாகும்.
- இந்த விதிகளிலிருந்து, இன்னும் இன்றியமையாத அவற்றுக்கு நிகரான இன்னொன்றும் இருக்கின்றது. பேச்சு, உரையாடல் சுற்றுகளில் ஆசிரியர்களின் வகிபாகமும் அவர்களுடைய வழிகாட்டல் பற்றியதாகும். இது அறிமுகப்பகுதி 4ஆ இல் எடுத்துக்காட்டுப்பட்டுள்ளது. அதன் நினைவூட்டலாக, பொருத்தமான திறவுச் சொற்களாகப் பின்வருவன: ஆசிரியரின் கட்டுப்பாடு, உருவாக்கமான வெளிப்பாடு, வினாக்களதும் மதியுரைகளதும், தொகுப்பாளர் செயற்பாடுகளை மாணவர்களுக்கு வழங்கல்.

---

## பேச்சுக்கல்விக்கான கட்டமைப்பும் நடுவண் கூறுகளும்:

- எ.கா. ஒருவருடைய குறுக்கீட்டினாலும் ஏனைய பேச்சாளர்களை முறையற்ற வகையில் தாக்கியதாலும் குலைக்கப்பட்ட உரையாடல் போன்ற உண்மையான சூழ்நிலை சிறந்த தொடக்கநிலையாக அமையும் இத்தகைய சூழ்நிலைகளில் கீழ்தரப்பட்ட கேள்வியோடு உரையாடலை உருவாக்கலாம். "எவ்வாறு சிறப்பாகவும் சமத்துவமாகவும் நாம் உரையாடலாம்?"
- முதல் இரண்டு அல்லது மூன்று விதிகள் (ஆகக்கூடியன!) கலந்துரையாடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓர் அட்டையில் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரின் கருத்தினைத் தழுவுதலை விட மாணவர்கள் தாங்களாகவே விதிகளை உருவாக்குதல் இன்றியமையாததாகும். மாணவர்கள் தம்முடைய வழமையான பாடத்திட்ட வகுப்புகளில் உரையாடல் பண்பாட்டினையும் அதன் விதிகளையும் ஏற்கெனவே நன்கு அறிந்திருப்பர். அடுத்த பக்கத்தில் உரையாடல் விதிகளுக்கான எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன.
- அடுத்துவரும் 2-3 கிழமைகளில் விதிகள் திரும்பத் திரும்பப் பயிற்சி செய்யப்படுகின்றன. வகுப்பிலிருந்து ஒருவரைப் பொறுப்புள்ள ஒரு நடுவராக தேர்ந்தெடுக்கலாம். அவர் யாராவது ஒருவர் விதியை மீறினால் உடனடியாகத் தலையிடுவார்.
- அடுத்த மாதங்களில், மேலே குறிப்பிட்டபடி விதிகள் விரிவாக்கப்பட்டு, மேலும் சீராக்கி மேற்கூறப்பட்டவாறு பயிற்சி செய்யப்படும்.
- எங்கள் உரையாடற் பண்பாடு எவ்வாறு மாற்றமடைந்தது என்பது பற்றி அடிக்கடி உரையாடல்கள் இடம்பெறவேண்டும், அவற்றில் மாணவர்கள் இன்னும் முன்னேற்றத்துக்கான ஆற்றல்வளத்தினைக் காணவேண்டும்.
- பெரும்பாலான விதிகள் சிறிய துணை மதிநுட்பங்களால் பக்கத்துணை பெறுவனவாக அமையலாம். எடுத்துக்காட்டுகளை அடுத்துவரும் பக்கத்தில் காண்க.

## உரையாடல் விதிகளுக்கான எடுத்துக்காட்டுகள்

- நான் உரத்தும் தெளிவாகவும் பேசுகிறேன்.
- நான் பிறர் பேசுவதைக் கேட்கிறேன்.
- நான் எவர் பேசினாலும் குறுக்கிடுவதில்லை.
- நான் பேச விரும்பினால் எனது கையை உயர்த்துவேன்.
- என் வகுப்புத் தோழர்களின் கருத்துகளை நான் மதிக்கிறேன்.
- ஒருவரின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நான் எவரையும் எள்ளிநகையாடவோ சிரிக்கவோ மாட்டேன்.
- நான் உரையாடல் தலைப்பிலிருந்து விலகமாட்டேன்.
- நான் முன்னர் பேசியவரின் கருத்துகளை எடுத்துக்காட்டுவேன்.
- நான் பேசும்போது என் அவையோரின் கண்களைப் பார்த்துப் பேசுவேன்.

---

## சில விதிகளை நடைமுறைப்படுத்த "துணைசெய் மதிநுட்ப" எடுத்துக்காட்டுகள்:

- எவரையும் குறுக்கீடு செய்யக்கூடாது என்னும் விதி தொடர்பாக: உரையாற்றும் மாணவர் கையில் ஒரு பந்தினை அல்லது ஒரு கல்லினை வைத்துள்ளார். அவர் உரையாற்றி முடித்தவுடன் அடுத்து உரையாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம் பந்தினைக் கொடுப்பார். இது பந்தினைக் கையில் வைத்திருக்கும் பிள்ளையே உரையாற்றுதற்கு உரித்துடையவர் என்பதை உணர்த்தும்.
- கூர்மையாகக் கேட்டல் பற்றிய கருத்துத் தொடர்பாக, அதாவது முன் பேசியவரின் கருத்துகளை எடுத்துக்காட்டல் பற்றிய விதி: 2-3 கலந்துரையாடல்களில், கருத்துக் கூறும் ஒவ்வொருவரும் "சுதா, இப்படிக் கூறினார்…நான் இதனை இவ்வாறு பார்க்கிறேன்…" என்னும் வாக்கியத்துடன்தான் தொடங்கவேண்டும். பொருத்தமான குறிப்பான வாக்கியத் தொகுதிகளுக்கு #12யும் பார்க்கவும்.
- கூர்மையாகக் கேட்டலில் மாற்றுவழி: ஒவ்வொரு மாணவரும் கலந்துரையாடலின்போது குறைந்தது ஒரு தடவையாவது இன்னொருவர் கூறியதை எடுத்துக்காட்டி வினவ வேண்டாம். ("சுதா, நீங்கள் கூறியதை நான் சரியாக விளங்கிக்கொண்டேனா? நீங்கள் குறிப்பிடுவது…?")
- ஆசிரியர் தன் நடுவண் இடத்தை விட்டு அகல துணைசெய் மதிநுட்பங்கள்:
  - அ) மாணவர்கள் தம்முள்ளே தாமாகவே உரையாடுபவரைத் தெரிதல் (அல்லது பந்தினை வேறொருவரிடம் கொடுத்தல், மேலே பார்க்கவும்).
  - ஆ) ஒவ்வொரு பெரிய கலந்துரையாடலுக்கும் ஒரு மேல் வகுப்பு மாணவரை தொகுப்பாளராகத் தேர்ந்தெடுத்தல். இந்த மாணவர் ஆசிரியரோடு இணைந்து கலந்துரையாடலை முன்னெடுக்க தொடக்க வினாக்களை அல்லது தூண்டிகளை உருவாக்கி செயற்பாட்டினை மேற்கொண்டு சீர்செய்வார். ஆசிரியர் தேவைப்படும் வேளையில் மட்டும் இடையீடு செய்வார். (இதற்கு #14-15 பார்க்கவும் )
- எல்லா மாணவர்களின் பங்களிப்பினையும் ஊக்குவிக்க ஒரு துணைசெய் மதிநுட்பம்: ஒவ்வொரு பிள்ளையும் மூன்று பொத்தான்களை, தாள் இடுக்கிகளை, அல்லது தாள் துண்டுகளைப் பெறுகின்றது. மாணவர்கள் வட்டமாக இருப்பர். கலந்துரையாடலில் பங்குபற்றியவர்கள் தங்களிடமுள்ளவற்றுள் ஏதாவது ஒன்றினை நடுவில் வைப்பர். இதனுடைய நோக்கம் எல்லா மாணவர்களும் தம்மிடம் உள்ளவற்றைக் கீழே இட வைப்பதாகும். இந்த அணுகுமுறை சில மாணவர்கள் உரையாடலில் செல்வாக்குச் செலுத்துவதையும் சிலருக்குப் பேசுதற்கே வாய்ப்புக் கிடையாமல் இருப்பதையும் தடுப்பதற்கேயாகும்.